பங்கேற்போம் ! உரிமையை நிலைநாட்டுவோம் !

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 03
குரல் : 02

ஏப்ரல் 2025 – ஜூன் 2025




## சூடான வெயில் குளிர்ச்சியான விடுமுறை

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 03 | குரல் : 02

ஏப்ரல் – ஜூன் 2025

**ஆசிரியர்கள்**

L. யுவராணி, V.சுஜிதா, S.ஜிஷ்ணு, K.நிஷாந்த்

**இணை ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, D. சந்தோஷ், M. சாதனா A.சஞ்சய். G.அபிநயா. J.ஐஸ்வரியா

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ், S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**ஓவியர்கள்**

S.விஷால், H. மோகித், D.கவியரசன்,S.தர்ஷன், H. சக்திராஜன், P. தனுஷ். D.அஷ்வின் A.முஹம்மது சுல்தான், P.S. பத்மேஷ்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி

நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி

குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வடிவமைப்பு**

S. விஷால், K. நிஷாந்த், L. யுவராணி, S.ஜிஷ்ணு,

வடிவமைப்பில் உதவி. திரு.G. டான்போஸ்கோ,



**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044-42632264
**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in


## ஆசிரியர் உரை

**நண்பர்களே வணக்கம்!! அனைவரும் நலம் தானே...!**

கோடை விடுமுறை என்றாலே நம் மனம் துள்ளி குதிக்கும் !! நம் முகத்தில் இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி, புன்னகை நிறைந்திருக்கும் !!

நாம் பள்ளித்தேர்வினை வெற்றிகரமாக முடித்துவிட்டோம். விடுமுறையும் விட்டாச்சு, நாம் இரண்டு மாதம் விடுமுறையில் என்ன செய்யப் போகிறோம்! கோடை விடுமுறையை எப்படி கழித்தோம்!! என்பதை குறித்துத் தான் இந்த இதழில் எழுதுவதாக முடிவு செய்தோம்.

நாம் முடிவு எடுத்த படி அனைவரும் உங்கள் கட்டுரைகளை மிகவும் சுவாரசியமாக எழுதியுள்ளீர்கள். கோடை விடுமுறையில் நீங்கள் அனுபவித்த இனிமையான நினைவுகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக அமைந்துள்ளது மிகவும் சிறப்பாக உள்ளது.

மேலும் இந்த இதழில் எழுதியுள்ள குழந்தைகளின் அற்புதமான அனுபவங்கள் மற்ற குழந்தைகளுக்கும் ஒரு விழிப்புணர்வாகவும், கற்றலாகவும் இருக்கும் என்ற நம்பிக்கை என்னுள் எழுந்துள்ளது.

மேலும் சிட்டெறும்புக்காக கட்டுரை எழுதும் நாம் அனைவரும் பிழையின்றி எழுதப் பழகிக் கொண்டோம் என்பது நம் கட்டுரைகளை படிக்கும் போதே கண்டறிய முடிகிறது. இது மிகவும் மகிழ்ச்சியான தகவலாக உள்ளது.

மேலும் நம் திறன்களை வளர்த்துக் கொள்ள சிட்டெறும்பை ஒரு தளமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.


இந்த இதழ் உங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை...

இதழை வாசிக்க நீங்கள் தயாரா? நானும் தயாராக உள்ளேன் !!

**“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”**

என்ற திருமூலர் எழுதிய பாடல் வரிகளுக்கேற்ப நமக்கு அறிந்த கல்வி மற்றும் சிறந்த அனுபவங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்வது சிறப்பான செயல்தானே!!

வாருங்கள் நண்பர்களே நாம் நம் கருத்துக்களை எழுதுவோம்!! மற்றவர்களையும் எழுதவைப்போம்!!



**S. ஜிஷ்ஷு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(ஏப்ரல் – ஜூன் 2025)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடு

| வரிசை எண் | மாதம் | செயல்பாடு |
|---|---|---|
| 1 | ஏப்ரல் | ➢ CACS ஒருங்கிணைப்பு கூட்டம் தகவல் அளிக்கபட்டது.<br>➢ இளம் வழி நடத்துனர் பயிற்சிகள் குறித்த தகவல் அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர்.<br>➢ குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம் திட்டமிடல் நடைப்பெற்றது<br>➢ குழந்தைகள் நகரசபை திட்டமிடல் நடைப்பெற்றது. |
| 2 | மே | ➢ ஒருநாள் திட்டமிடல் முகாம் தகவல்கள் அளிக்கப்பட்டது.<br>➢ தேசிய அளவு குழந்தைகள் கலந்துரையாடல் நிகழ்வுக்கு குழந்தைகள் தேர்வு செய்தல். |
| 3 | ஜூன் | ➢ குழந்தை உழைப்பு எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலங்கள் திட்டமிடப்பட்டது.<br>➢ மண்டல அளவு தேர்தல் குறித்த தகவல்கள், திட்டமிடல் நடைப்பெற்றது. |

### ஏப்ரல்

**01.04.2025** அன்று அம்பேத்கார் நகர் சமூகம் மற்றும் குழந்தை உரிமை கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது. போதை பொருட்கள் தங்கள் பகுதிகளில் விற்கப்படுகிறது என்று குழந்தைகள் கூறினார்கள் மாமன்ற உறுப்பினரிடம் மனு கொடுக்கலலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**05.04.2025** அன்று சமூகம் மற்றும் குழந்தை உரிமை கண்காணிப்பு குழு உறுப்பினர் பயிற்சி திருவொற்றியூர் கார்கில் நகர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் ஆறு குழந்தைகள் கலந்து கொண்டு பகுதி பிரச்சினையைப் பற்றிபகிர்ந்து கொண்டனர்.



**07.04.2025** மணிகண்ட முதலி மேல்நிலைப் பள்ளியில் வாசிப்பு திறன் போட்டியில் கலந்து கொண்டு செல்வி. தன்மையா அவர்கள் முதல் பரிசு பெற்றார்.

**09.04.2025** முதல் **15.04.2025** வரை மண்டலம் -1 மற்றும் 4 ஐ சேர்ந்த 15 பகுதிகளில் சென்னை மாநகராட்சி, பள்ளி கல்வித்துறை மற்றும் அருணோதயா இணைந்து குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் மூலம் தீவிர பள்ளி சேர்க்கை குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்பட்டது.இந்த நிகழ்வில் மண்டல அலுவலர், இளநிலை பொறியாளர் உதவி பொறியாளர், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.இதன் தாக்கமாக பகுதி மக்கள் விழிப்புணர்வு அடைந்தனர். பள்ளிகளில் அதிக மாணவர்கள் சேர்ந்துள்ளனர் என்று ஆசிரியர்கள் கூறினார்கள்

**14.04.2025** அன்று ஏரியா சபை கூட்டம் நடந்தது இந்த கூட்டத்தில் குழந்தைகள் பங்கேற்று அவர்களின் பிரச்சனைகளை பேசி அதற்கு தீர்வும் கண்டுள்ளனர்.

**14.04.2025** அன்று ஆல் இந்தியா ரேடியோ பகுதியில் போலீஸ் பெண்கள் மற்றும் ஆண்கள் மன்றத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் விழாவை விமர்சையாக கொண்டாடினார்கள் 30 குழந்தைகள் இந்த விழாவில் பங்கேற்றனர்

**19.04.2025** குழந்தைகள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது. இதில் 80 குழந்தைகள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் இளம் வழி நடத்தினர் பயிற்சி, பயிற்சியின் தலைப்புகள் மற்றும் முகாம்கள் திட்டமிடப்பட்டது. .இக்கூட்டத்தை செயற்குழு உறுப்பினர்கள் வழிநடத்தினார்கள்.

**25.04.2025** குழந்தைகள் நகரசபை திட்டமிடல் கூட்டம் 1 0 வார்டுகளில் நடைபெற்றது. இதில் 5 0 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்துக் கொண்டனர்.

**28.04.2025, 29.04.2025, 30.04.2025** ஆகிய தேதிகளில் இளம் வழிநடத்துனர் பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் 40 குழந்தைகள் கலந்து கொண்டனர் 40 குழந்தைகளில் 23 குழந்தைகள் இளம் வழிநடத்துனராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் பகுதியில் உள்ள அனைத்து குழந்தைகள் சங்கங்களுக்கும் சென்று தான் கற்றுக் கொண்டவற்றை மற்ற குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தனர்.



**28.04.2025** எண்ணூர் பகுதி குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி நடைபெற்றது, இப்பயிற்சியில் 25 குழந்தைகள் கலந்து கொண்டனர். இதில் மேஜிக் ஆர்ட், பழங்கள் மற்றும் கண்ணாடி பாட்டிலில் ஓவியம் வரையவும் கற்றுக் கொண்டனர்.



**30.04.2025** அன்று குழந்தைகள் நகர சபை கூட்டம் 1 0 வார்டுகளில் நடைபெற்றது. இதில் 1700 குழந்தைகள் கலந்து கொண்டனர். தங்கள் பகுதியில் நடக்கும் உரிமை மீறல் குறித்த விஷயங்களை கோரிக்கையாக எழுதி மாமன்ற உறுப்பினரிடம் கொடுத்துள்ளனர்.

## மே

**06.05.2025** ஒரு நாள் திட்டமிடல் பயிற்சி முகாம் துவங்கியது. இதில் 38 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாமில் 1330 குழந்தைகளுக்கு மேல் கலந்து கொண்டனர். குழந்தைகள் உரிமை, பங்கேற்பு, பள்ளியில் குழந்தைகள் கடமைகள், செய்யக் கூடாதவை, குழந்தைகளுக்கான சட்டங்கள், சலுகைகள், பள்ளிக் கல்வித்துறை கட்டமைப்பு போன்றவை குறித்து அறிந்துக் கொண்டனர்.



**17.05.2025** சட்ட கல்வி குறித்த ஊக்குவிப்பு முகாம் நடைபெற்றது. இதில் பகுதி அளவில் 15 குழந்தைகள் கலந்து கொண்டனர் அதில் இரண்டு குழந்தைகள் அடுத்த நிலைக்கு தேர்வாகி உள்ளனர்.



**22.05.2025** லிருந்து **24.05.2025** வரை தேசிய அளவில் குழந்தைகள் கலந்துரையாடல் மதுரை லேடி டோக் கல்லூரியில் நடைபெற்றத்து. இதில் 12 மாநிலங்களில் இருந்து குழந்தைகள் கலந்து கொண்டனர். அருணோதயா குழந்தைகள் சங்கத்தைச் சேர்ந்த செல்வன். சபரி செல்வி. ஷர்மிளா கலந்துக் கொண்டனர். இந்திய அரசியல் அமைப்பு சட்டம், இணையதள செயலிகள் குறித்த விழிப்புணர்வு, உலகளாவிய குழந்தைகள் பிரச்னைகளை குறித்த விழிப்புணர்வு, வீதிநாடகம், ஊமை அரங்கம் போன்றவை குறித்த கற்றல் அமர்வு நடைபெற்றது. இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்றனர்.



**27.05.2025, 28.05.2025** ஆகிய தேதிகளில் அடையாறில் உள்ள இளையோர் விடுதியில் சிட்டெறும்பு புத்தக ஆசிரியர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. இதில் 25 குழந்தைகள் கலந்து கொண்டு இதழ் என்றால் என்ன, இதழ் வடிவமைப்பு, குழந்தைகள் உரிமை கண்ணோட்டத்தில் புத்தகம் எழுதுவது எப்படி என்று அறிந்து கொண்டனர். மேலும் சிட்டெறும்பு புத்தகத்தின் புதிய குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## ஜூன்

**01.06.2025** வரை தீனபந்துபுறம் என்ற பயிற்சி மையத்தில் குழந்தைகள் சங்க குழந்தைகள் மற்றும் இளைஞர் அமைப்பினருக்கு கலைப் பயிற்சி நடைபெற்றது. இதில் 35 குழந்தைகள் கலந்து கொண்டனர். இதில் பறை, ஒயில், கரகாட்டம், ரெஸ்லின் போன்றவை கற்றுக் கொண்டனர்.



**06.06.2025, 11.06.2025, 12.06.2025** ஆகிய மூன்று நாட்கள் குழந்தை உழைப்பு எதிர்ப்பு தின ஊர்வலம் திருவெற்றியூர். கொருக்குப்பேட்டை, இராயபுரம், எண்ணூர் பகுதியில் நடைபெற்றது. இதில் 500 குழந்தைகள் கலந்துக் கொண்டனர் பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.


**16.06.2025** சமூகம் மற்றும் குழந்தை உரிமை கண்காணிப்பு குழு கூட்டம் முத்துமாரியம்மன் தெருவில் நடைபெற்றது கூட்டத்தில் தண்ணீர் பிரச்சனை அதிகமாக உள்ளது. கழிவறையில் ஐந்து ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்று பகுதியளவில் குழந்தைகள் கண்டறிந்து கூட்டத்தில் பேசியுள்ளனர். இது குறித்து மாமன்ற உறுப்பினர்களிடம் புகார் அளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.



**26.06.2025 -** 38 வது வார்டு குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் சென்னை உயர்நிலைப் பள்ளி பட்டேல் நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய்துறை அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், காவல்துறை அலுவலர், அங்கன்வாடி ஆசிரியர், பள்ளி ஆசிரியர்கள், மாமன்ற உறுப்பினர், 2 இளைஞர்கள் மற்றும் 3 குழந்தைகள் கலந்து கொண்டு 38வது வார்டை குழந்தைகள் நேய வார்டாக அறிவிக்க திட்டமிட்டனர்.

**27.06.2025** இராயபுரம் மலேரியா கால்வாய் தூர்வாரி சுத்தம் செய்ய வேண்டுமெனக் குழந்தைகள் கூறியுள்ளனர். பிரச்சனையைக் குறித்து பகுதி தலைவர்கள், மாமன்ற உறுப்பினரிடம் குழந்தைகள் பேசுவதாக திட்டமிடப்பட்டுள்ளது

**28.06.2025** அன்று திருவொற்றியூர், மற்றும் இராயபுரம் பகுதியில் மண்டல அளவு குழந்தைகள் சங்க தேர்தல் நடைபெற்றது. இதில் 60 குழந்தைகள் கலந்து கொண்டனர். இதில் மண்டல அளவிளான 9 பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



ட.. யுவராணி
12 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை





# ஜில்லுனு ஒரு சுற்றுலா

என் பெயர் M. ரம்யா நான் 12ஆம் வகுப்பு முடித்து உள்ளேன். போஜராஜன் நகர் பகுதியில் வசித்து வருகின்றேன். நான் என் கோடை விடுமுறையைக் கொண்டாட ஊட்டிக்கு குடும்பத்தினருடன் சென்றேன். குடும்பத்தில் உள்ள அனைவரும் எக்மோர் இரயில் நிலையம் சென்று தொடர் வண்டியில் இரவு நேர பயணம் செய்தோம். இரவு பயணத்தின் போது என் அக்கா, தம்பி ஆகியோர் பாட்டுப்பாடி, நடனமாடி மகிழ்ந்தோம். உணவுகளை அனைவரும் பகிர்ந்து கொண்டோம். அனைவரும் எங்களை உற்சாகப்படுத்தியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் காலையில் மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தை அடைந்தோம். ஊட்டி மலை மீது போகும் ரயிலில் ஏறி நாங்கள் பயணம் செய்தோம். அப்பொழுது மலைகளில் உள்ளே தொடர்வண்டி போகும் பொழுது மிகவும் சந்தோஷமாக இருந்தது கொஞ்சம் பயமாகவும் இருந்தது.



நாங்கள் கத்தி கூச்சலிட்டு மகிழ்ந்தோம். மலைகளில் உள்ள தேயிலைச் செடிகள் மற்றும் பூண்டு, மிளகு செடிகள் போன்றவற்றை நாங்கள் பார்த்தோம். அப்பொழுது என்னுடைய அம்மா அந்தப் பயிர்கள் மலைப்பிரதேசத்தில் மட்டும் தான் விளையும் என்று கூறினார்கள். அதைக் கேட்கும் போது எனக்கும் வியப்பாக இருந்தது.

தங்கும் விடுதியில் ஓய்வு பெற்றோம். அந்த தங்கும் விடுதியில் சுற்றி உள்ள இயற்கை காட்சிகள் என்னை மிகவும் கவர்ந்தது, வானுயர்ந்த மலைகள் கலர் கலரான பூக்கள் காற்றில் கலந்த மிதமான குளிர் உணர்வு போன்றவை எனக்கு மிகவும் பிடித்தது.மேலும் குளிரான சூழலுக்கு ஏற்றவாறு நாங்கள் சூடான உணவு வகைகளை உண்டு மகிழ்ந்தோம். பிறகு சாக்லேட் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு சென்றோம்.

அங்கு பல விதவிதமான சாக்லேட்களை வாங்கியும், அங்கு சாக்லேட் செய்வதை பார்த்து மகிழ்ந்தோம். தேயிலை தோட்டத்தைப் பார்த்தோம். தேயிலையை எப்படி விளைவிக்கிறார்கள் என்று நாங்கள் தெரிந்து கொண்டோம். பின்பு மலைப்பகுதியை இரவில் பார்க்கும் போது மிகவும் அமைதியான உணர்வை கொடுத்தது. அங்கிருந்த ஏரியில் போட்டிங் சென்றோம். தண்ணீரில் படகு போகும் போது கொஞ்சம் பயமாக இருந்தது. இரண்டு நாட்கள் அங்கு தங்கி இருந்தோம். அந்த இடத்தை விட்டு வருவதற்கு மனதில்லாமல் நாங்கள் ஊட்டி விட்டு மீண்டும் வீடு திரும்பினோம். வந்த பிறகும் நான் பார்த்த காட்சிகள் என் கண் முன்னே பசுமையாக இருக்கின்றது..



**M. ரம்யா**
12 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

## கோடை விடுமுறைக் கொண்டாட்டம்



கொண்டாட்டம்! நிறைய சந்தோஷம் இருக்கும்!
ஊருக்கு போகலாம்! கொஞ்சம் குறும்பும் செய்வோம்!
பூங்காக்கள் நிரம்பும்! பூஞ்சிரிப்பு எங்கும் இருக்கும்!
கொட்டமடிக்கும் கூட்டம்! பேரோசை எழுப்பும்!
வானத்துக்கும் பூமிக்கும் குதிப்போம்!
அம்மாவை பார்த்தால் பதுங்குவோம்!
தூக்கத்தை மறப்போம்!
நிலவின் நிழலில் விளையாடுவோம்!



**S. தனிஷா**
9 ஆம் வகுப்பு. கொருக்குப்பேட்டை

# மறு வாய்ப்பு

என் பெயர் திவாகர். நான் ஜெயகோபால் கரோடியா உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தேன். அம்மா, அப்பா இருவரும் கூலி வேலைக்கு சென்று விடுவார்கள். நான் பள்ளிக்கு செல்கிறேனா? இல்லையா! என்று கூட அவர்களுக்கு தெரியாது. இதை பயன்படுத்திக் கொண்டு நண்பர்களுடன் சேர்ந்து கேட்ரிங் பணி செய்து அதில் வரும் பணத்தில் மொபைலுக்கு ரீசார்ஜ் செய்து கேம் விளையாடுவது, ஊர் சுற்றுவது என்று இருந்தேன். இப்படியே 6 மாதம் பள்ளிக்கு செல்லாமல் இருந்தேன். ஒரு நாள் என் பள்ளி நண்பன் பிரசாந்தை வழியில் பார்த்தேன். அவனிடம் பள்ளி குறித்து விசாரித்தேன். 10 ஆம் வகுப்பு செயல்முறை தேர்வு நடந்து முடிந்து விட்டது என்று அவன் சொன்னான். எனக்கு தேர்வு எழுத வேண்டும் என்று ஆசை இருந்தது. ஆனால் பள்ளியில் சேர்ப்பார்களா என்று பயமாக இருந்தது. அப்போது ஒரு நாள் அருணோதயாவில் இருந்து செல்லம்மாள் மிஸ் வீட்டிற்கு வந்து பள்ளி ஆசிரியர்கள் உன் பெயரை கொடுத்து உன்னை பள்ளிக்கு அழைத்துவர சொன்னார்கள்



**S. திவாகர்**
11 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

நீ நன்றாக படிக்க கூடியவனாம். அதனால் ஆசிரியர் உனக்கு வாய்ப்பு அளிப்பதாக கூறியுள்ளார், என்னுடன் வா நான் உன்னை பள்ளிக்கு அழைத்து செல்கிறேன் என்றார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மீண்டும் பள்ளிக்கு செல்ல முடியுமா என்று நினைத்து இருந்த நான் மீண்டும் பள்ளிக்கு சென்றேன். பள்ளி ஆசிரியர் உதவியுடன் செயல்முறை தேர்வு எழுதினேன்.

தவறாமல் பள்ளிக்கு சென்று தேர்வு எழுத தயார் ஆனேன். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதினேன். 4 பாடங்களில் தேர்ச்சி பெற்றேன். ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை. மீண்டும் எனக்கு செல்லம்மாள் மேடம் மூலம் ஆலோசனை கிடைத்தது. நான் என் முயற்சியை விடவில்லை மீண்டும் மறுதேர்வு எழுதி இப்போது தேர்ச்சி அடைந்து அதே பள்ளியில் கம்ப்யூட்டர் அப்ளிகேஷேன் பிரிவில் சேர்ந்து படிக்கின்றேன். கை நழுவி போன வாய்ப்பு மீண்டும் கை சேர்ந்தது. எனக்கு கிடைத்த அனுபவங்களை வைத்து நான். நன்றாக படித்து 12ஆம் வகுப்பு தேர்வில் சிறந்த மதிப்பெண் எடுத்து தேர்ச்சி அடைவேன்.

# நான் மகிழ்ந்த விடுமுறை

என் பெயர் எஸ். நர்மதா. நான் அம்பேத்கர் நகர் பகுதியில் வசித்து வருகிறேன். என் சொந்த ஊர் திண்டிவனம் அருகில் உள்ள ஆலந்தூர் கிராமம். என் தாத்தா பாட்டி அங்கு வசித்து வருகிறார்கள். நான் கடந்த மூன்று ஆண்டுகளாக என் குடும்ப பிரச்னைகள் காரணமாக கிராமத்திற்கு செல்லவில்லை. திடீரென்று தாத்தாவிற்கு உடல் நலம் சரி இல்லை என்று அழைப்பு வந்தது. மூன்று ஆண்டுகளுக்கு பிறகு நாங்களும் எங்கள் தாத்தாவை பார்க்க சென்றிருந்தோம். அப்பொழுது மூன்று வருடங்கள் கழித்து தாத்தா பாட்டியை பார்த்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. பாட்டி என்னைக் கட்டி அனைத்துக் கொண்டு அழுதார். தாத்தாவை பார்த்தது மிகவும் கஷ்டமாக இருந்தது. பின்பு உறவுக்காரர்கள் அனைவரும் தாத்தாவை பார்க்க வந்தார்கள். அவர் உறவினர்கள் அனைவரையும் பார்த்து மிகவும் மகிழ்ச்சியாக பேசத் தொடங்கினார். ஒரு வாரத்திற்கு பிறகு தாத்தாவின் உடல்நிலை சரியானது.

அந்த கிராமத்துப் பகுதியில் கோவில் திருவிழா நடந்தது. அத்திருவிழாவில் ரங்கராட்டினம், மஞ்சள் தண்ணீர் ஊற்றிய விளையாட்டு, கோல போட்டி எனப் பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. அந்தப் போட்டிகளில் நாங்கள் கலந்து கொண்டோம். பல்வேறு விளையாட்டுகள் விளையாடி மகிழ்ந்தோம். பல உறவுகளை சந்தித்தும், பேசியும் மகிழ்ந்தோம். உறவுகள் அனைவரும் இணைந்து ஊர் பொங்கல் வைத்தார்கள். மாலையில் சாமி ஊர்வலம் வந்தது. நாங்கள் சாமிக்கு பூஜை செய்தோம். மூன்று வருடங்கள் கழித்து மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். கிராமத்தின் மண்வாசனை மற்றும் சுத்தமான குடிநீர், சுத்தமான காற்று என்று எனக்கு பிடித்த ஒரு வாழ்க்கையை நான் எனது விடுமுறையில் கழித்தேன்.



**S. நர்மதா**
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



# கோடை விடுமுறையும் எனக்கு கிடைத்த அனுபவமும்

என் பெயர் T. பிரிதிவிராஜ் நான் அன்னை சிவகாமி நகரில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த கோடை விடுமுறையில் ஏற்பட்ட அனுபவங்களை நான் பகிர்ந்து கொள்கின்றேன். நான் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இரண்டு வருடம் உறுப்பினராகவும், ஒரு வருடம், குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் துணை செயலாளராகவும் இருந்துள்ளேன். குழந்தைகள் சங்கத்தின் மூலம் நடத்தும் நிகழ்வுகள் அனைத்திலும் பங்கேற்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் அதுவும் கோடை விடுமுறை என்றாலே குழந்தைகள் சங்கத்தில் முகாம்கள் அதிகமாக நடைபெறும். முகாம்களில் மகிழ்ச்சியாகவும் இருக்கலாம், நிறைய விஷயங்கள் கற்றும் கொள்ளலாம். இம்முறையும் ரெட்ஹில்ஸ் அடுத்த வாணியன் சத்திரம் கிராமத்தில் உள்ள பெத்தேல் மிஷன் கார்டன் என்னும் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய முகாமில் இளம் வழிநடத்துனர் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு என் நண்பர்களுடன் பங்கேற்றேன். அங்கு எனது அருணோதயாவில் உள்ள மற்ற நண்பர்களையும் வெகு நாட்கள் கழித்து சந்தித்தேன். ஏப்ரல் 28.29.30 ஆகிய மூன்று நாட்கள் பயிற்சி நடந்தது. கேம்ப் சைட் பார்த்தவுடன் எங்களுக்கு மகிழ்ச்சி !!மா, வேம்பு, தென்னை, வாழை போன்ற மரங்களின் ஜில் என்ற இதமான காற்று எங்களை வரவேற்றது. அடுக்குமாடி குடியிருப்பில் பெட்டி போன்ற வீட்டில் கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்த நான் இப்படி ஒரு இடத்தில் மூன்று நாட்கள் தங்கப் போகிறோம் என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அங்கு பள்ளியில் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்தல் என்ற தலைப்பில் எங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் நான் சிறப்பாக பங்கேற்றேன் அதனால் நான் இளம் வழிநடத்துனராக தேர்வு செய்யப்பட்டேன். நான்கு பகுதிகளுக்கு சென்று 150 குழந்தைகள் சங்க குழந்தைகளுக்கு ஒருநாள் திட்டமிடல் பயிற்சி கொடுத்தேன். எனது பங்கேற்பை பாராட்டி எனக்கு ஊக்கத் தொகையும் அருணோதயா இயக்குனர் மூலம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையில் என் கல்விக்கான உபகரணங்கள் வாங்கிக் கொண்டேன். மொத்தத்தில் இந்த பயிற்சி எனக்கு ஒரு இனிமையான நினைவாகவும் மனநிறைவாகவும் இருந்தது. பயிற்சிக்கு ஏற்பாடு செய்த அருணோதயா இயக்குனருக்கு நன்றி, எங்களை வழிநடத்திய அருணோதயா பணியாளருக்கும் நன்றி!!



**T. பிரித்விராஜ்**
11 ஆம் வகுப்பு, எண்ணூர்

## எனது ஆசை



சின்ன சின்ன ஆசை
விடுமுறைவிட ஆசை
ஊருக்கு செல்ல ஆசை
குளத்தில் நீச்சல் அடிக்க ஆசை
மழையில் நனைய ஆசை
அதில் கப்பல் விட ஆசை
மலை உச்சியில் ஏறி ஓடி விளையாட ஆசை
எருது மேல் ஏறி ஊர் சுற்ற ஆசை
நுங்கு வெட்டி தின்று அதில் வண்டி விட ஆசை
திருவிழாவிற்கு சென்று இராட்டினமாட ஆசை
அடுத்த விடுமுறை வரும் வரை நான் காத்திருக்க ஆசை



**H. மோஹித்**
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# கவர்ஸ்டோரி

## சூடான வெயில்!! குளிர்ச்சியான விடுமுறை!!

### அறிமுகம்

கோடை விடுமுறை என்பது பள்ளி மாணவர்களாகிய எங்களுக்கு ஒரு அற்புதமான நாட்கள், அடுத்த வகுப்பிற்கு தயாராக ஒரு மகிழ்ச்சியான இடைவெளி, அப்பாடா ! தேர்வு முடிந்தது. குடும்பத்துடனும், நண்பர்களுடனும் நேரத்தை செலவழிக்கவும், புது இடங்களுக்கு சுற்றுலா செல்லவும், உறவினர்களை சந்திக்கவும், தனித்திறன்களை வளர்த்து கொள்ளவும் ஒரு வாய்ப்பு

### கால நிலை

கால நிலை என்பது, நான்கு வகைப்படும் அவை இலையுதிர் காலம் கோடைக் காலம், மழைக் காலம், குளிர் காலம் ஆகியவை ஆகும்.

மாணவர்களே நம் விடுமுறை எந்தக் காலக் கட்டத்தில் தொடங்கும் ?

கோடைக் காலத்தில் தான் நம் விடுமுறை நாட்கள் துவங்கும். கோடைக் காலத்தில் தான் வெய்யில் சுட்டெரிக்கும். அதுவும் நாம் வாழும் வடசென்னைப் பகுதி கடலோரப் பகுதி என்பதால் கோடை வெயில் அதிகமாக இருக்கும். இக்காலத்தில் நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால் கோடை விடுமுறை விடப்படுகிறது.

### கோடையில் நம்மை பாதுகாத்து கொள்வது எப்படி?

காலநிலை மாற்றங்களிலிருந்து நம்மை தகவமைத்துக் கொள்ள இயற்கையே நமக்கு சிலவற்றை பொக்கிஷமாக அளித்துள்ளது. அவற்றை நாம் தவறாது பயன்படுத்த வேண்டும். அவை என்னவென்று பார்ப்போம்.

### பழங்கள் மற்றும் காய்கறிகள்

நுங்கு ,தர்பூசனி, வெள்ளரிக்காய், கிரிணிப்பழம், இளநீர், நாவல் பழம், நெல்லிக்காய் போன்ற தண்ணீர் மிகுந்த பழங்களும், முள்ளங்கி, சுரைக்காய், புடலங்காய், பெங்களூர் கத்தரிக்காய், போன்ற காய்கறிகளும் கோடைக் காலத்தில் அதிகமாக கிடைக்கும். விலை மலிவான மாம்பழம், முந்திரிப்பழம், கொய்யா போன்றவையும் கிடைக்கும். இவற்றை நாம் சீசனுக்கு தவறாமல் சாப்பிடுவதன் மூலம் வெயில் தாக்கத்தினால் ஏற்படும் நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

### உடைகள்

கதர்ஆடை, பருத்தி ஆடை போன்ற உடைகளை அணிவதன் மூலம் வெய்யில் தாக்கத்தினால் ஏற்படும் சரும நோய்களைத் தவிர்க்கலாம்.

### பழக்க வழக்கங்கள்

தினமும் இரண்டு முறை குளிப்பது, சுத்தமான ஆடைகள் அணிவது, பாட்டிலில் அடைக்கப்பட்ட பானங்களை அருந்தாமல் பழச்சாறுகள் அருந்துவது. வெய்யிலில் சுற்றாமல் இருப்பது போன்றவை கோடைக் காலத்திற்கு சிறந்த செயல்பாடாகும்.



**S.** விஷால்
கல்லூரி முதலாம் ஆண்டு, எண்ணூர்

## கவிதை

கோடை விடுமுறை வந்தது!
புத்தகங்கள் பையில் ஒளிந்தது!
நண்பர்கள் கூட்டம் நிறைந்தது!
பந்து மட்டைக்கு வேலை வந்தது !
தாத்தா பாட்டியின் பாசம்!
குழந்தைகள் கடற்கரையில்
சந்தோஷம்!
அப்பா அம்மாவுக்கு திண்டாட்டம் !
குழந்தைகளுக்கு கொண்டாட்டம்!
புத்தகம் என்னும் சுமை இல்லாமல் -
சிறகடித்து பறக்கும் குழந்தைகள்!
பாரம்பரிய விளையாட்டு விளையாடி
குழந்தையின் உடல் பலம் பெற்றது!



**R.** ரித்திகா
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# பங்கேற்பின் பயன்

எனது பெயர் டி. சந்தோஷ் நான் 12 ஆம் வகுப்பு படிக்கிறேன். ஒவ்வொரு மாதம் நடக்கும் வளரிளம் பருவம் கூட்டத்தில் கலந்து கொள்வேன். எங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். மாதக் கூட்டத்தில் தெய்வானை மேடம் அவர்கள் குழந்தைகள் பங்கேற்பு நிகழ்ச்சியில் நாங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் உங்கள் திறமை வளர்வதற்கான வாய்ப்பு வரும் என்று கூறினார்கள். நான் விடுமுறை நாட்களில் வருகிறேன். அனைத்து நிகழ்விலும் கலந்து கொள்கிறேன் என்று கூறினேன். மே மாதம் இளவழிநடத்துனர் பயிற்சியில் கலந்து கொண்டேன். தேர்வும் பெற்றேன். பகுதியில் குழந்தைகளுக்கு வகுப்பு எடுத்தேன். என் திறமை வளர்ந்து இருப்பதைக் கண்டேன். அது மட்டுமல்ல சிட்டெறும்பு இதழ் பயிற்சியில் என் பெயர் கொடுத்தேன். அடையாறு இளைஞர் விடுதியில் இரண்டு நாள் பயிற்சி நடந்தது. ஒரு பத்திரிகை எப்படி எழுதுவது, படம் எப்படி போடுவது என கற்றுக் கொடுக்கப்பட்டது. நான் மிகவும் ஆர்வமாக பங்கேற்றதின் விளைவாக என் திறமையை வெளிக்காட்டினேன். அதன் பயனாக இதழ் ஆசிரியர் பயிற்சியில் இணை ஆசிரியராக தேர்வு செய்யப்பட்டேன். அனைவரும் பாராட்டினார்கள். எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது, இனி நடக்கும் நிகழ்வுகளில் நான் நிச்சயம் கலந்து கொண்டு என் திறமையை வளர்த்துக் கொள்வேன் என்று முடிவெடுத்து உள்ளேன்.



**D. சந்தோஷ்**
12 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# இயற்கையுடன் சில நாள்

என் பெயர் கே.சந்தியா. நான் எம்ஜிஆர் நகர் ஆறாவது தெருவில் வசிக்கிறேன் என்னுடைய சொந்த ஊர் காஞ்சிபுரம். அங்கு தான் அம்மாவின் பாட்டி உள்ளார். அவர் மிகவும் வயதானவர். அவரை பார்க்க யாரும் இல்லை. சொந்த பந்தம் இல்லை. சென்னைக்கு வரச் சொன்னால் வரமாட்டேன் என்கிறார். அதனால் பள்ளி விடுமுறை நாட்களில் என் குடும்பத்தினர் சென்று பள்ளி திறக்கும் வரை நன்றாக பார்த்துக் கொள்வோம் . அவருக்கு பிடித்தமான உணவை செய்து கொடுப்போம். நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருப்போம். எங்களை குடும்பத்தை பார்த்தால் பாட்டிக்கு மிகவும் சந்தோஷம். அதனால் விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் சென்று விடுவோம். இந்தமுறையும் விடுமுறைக்கு பாட்டியின் வீட்டிற்கு சென்றோம். பாட்டியின் வீடு மிகவும் அழகாக இருந்தது. ஓலை வேயப்பட்ட வீடு தான் ஆனால் வீட்டைச் சுற்றி தோட்டம். அங்கு தக்காளி, பச்சைமிளகாய், கீரைச்செடி, பூச்செடிகள் போன்றவை வளர்ந்து இருந்தன. கனகாம்பரம், ரோஜா, முல்லைக்கொடி போன்ற பூக்கள் என்னை மிகவும் கவர்ந்தது. சென்றமுறை இவ்வாறு செடிகள் அதிகம் இல்லை. இந்த முறை பாட்டி தோட்டத்தை அழகாக வைத்துள்ளார். நான் தினமும் செடிகளுக்கு தண்ணீர் விடுவேன், பூக்களை பறிப்பேன், பாட்டியுடன் வயல் வெளிக்கு செல்வேன். இப்படி என் விடுமுறை நாட்கள் இனிமையாகக் கழிந்தது.



**K. சந்தியா**
7 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# இனிதே முடிந்தன தேர்வுகள்

இனிதே முடிந்தன தேர்வுகள்
மனமோ விரித்தன சிறகுகள்!!

பலப்பல விடுமுறை திட்டங்கள்
மனதில் பரந்தன பட்டங்கள்!!

உறவினர் வீடுகளுக்கு செல்லுதல்
சில சுற்றுலாப் பயணங்கள்!!

குழந்தைகள் சங்கப் பயிற்சிகள்
வாழ்க்கை திறன் பயிற்சிகள்!!

வாழ்வில் உதவும் பாலங்கள்
புதிதாய் கிடைத்தத் தோழர்கள்!!
இனிதே முடிந்தது விடுமுறைக் காலங்கள்!!





**B. சிவகார்த்திகேயன்**
8 ஆம் வகுப்பு, இராயபுரம்

# முயற்சியின் வெளிப்பாடு

எனது பெயர் N.சாபுராபீவி. நான் ஜீவா நகரில் வசித்து வருகிறேன். டேனியல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கிறேன். நான் பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் எப்படி எடுத்தேன் என்று இந்த சிட்டெறும்பு பத்திரிகையில் வெளியிடுகிறேன். பள்ளிக்கு விடுமுறை எடுக்காமல் தொடர்ந்து செல்வேன். அன்றாடம் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை அன்றே முடித்து விடுவேன். நான் நன்றாக படிப்பதால் ஆசிரியர்களுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும். வீட்டில் அம்மா எனக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் அதனால் நாம் எண்ணிய இலட்சியத்தை அடைய முடியும் என்றும் ஆலோசனை கூறுவார்கள் அம்மா, ஆசிரியர்கள், எனது பாட்டி, பெரியவர்கள் கூறும் ஆலோசனையை மனதில் பதிய வைத்துக் கொள்வேன். காலை 5 மணிக்கு எழுந்து படிப்பேன். பள்ளியில் டியூஷன் சேரவில்லை. பள்ளியில் நடக்கும் பாடத்தை வீட்டில் தான் படித்தேன். அதிகம் டிவி பார்க்க மாட்டேன். கைபேசி அதிகம் பார்க்க மாட்டேன். படிப்பு விஷயத்துக்கு மட்டும் கைபேசி பயன்படுத்துவேன். எனக்கு தெரியாத பதில்களை நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். என் பெற்றோர்கள், ஆசிரியர்கள் என்னை ஊக்கப்படுத்தினார்கள்.

எனக்கு படிக்க வேண்டும் என்ற ஆசையும், ஆர்வமும் அதிகமாக இருந்தது. நான் மருத்துவம் படிக்க ஆசைப்படுகிறேன். பத்தாம் வகுப்பு தேர்வில் நான் பள்ளியில் மூன்றாம் இடம் பிடித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பத்தாம் வகுப்பில் 483 மதிப்பெண். எடுத்தேன். அடுத்து நான் 12ஆம் வகுப்பில் இதைவிட அதிக மதிப்பெண் எடுத்து முதல் இடத்தில் வருவேன் என்று முடிவெடுத்து உள்ளேன்.



**N.** சாபுராபீவி
11 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# மாற்றம்

என் பெயர் கற்குவேல். நான் எண்ணூரில் உள்ள காட்டுக் குப்பம் பகுதியில் வசிக்கிறேன். அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் ஒரு உறுப்பினராக உள்ளேன். நான் இந்த கோடை விடுமுறையில் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டு இருந்தேன். எங்கும் ஊருக்கும் செல்லவில்லை. ஆனால் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் நிறைய பயிற்சிகள் நடைபெற்றது. என் அண்ணன் இளம் வழிநடத்துனர் முகாமில் கலந்து கொண்டார், எங்கள் பகுதியில் மே மாதம் ஒருநாள் திட்டமிடல் முகாம் நடைபெற்றது. எனக்கு இந்த பயிற்சி மிகவும் பிடித்து இருந்தது. பள்ளியில் என்ன விஷயங்கள் நாம் செய்ய வேண்டும்,





**S.** கற்குவேல்
7 ஆம் வகுப்பு, எண்ணூர்

என்ன விஷயம் நாம் செய்ய கூடாது, நம் பொறுப்புகள் என்ன கடமைகள் என்ன, பள்ளி கல்வித்துறையின் கட்டமைப்பு, பள்ளியில் குழந்தைகள் பங்கேற்பு, பள்ளியுடன் தொடர்புடைய துறைகள், குழந்தைகளுக்கான சட்டங்கள், குழந்தைகளுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு எந்த துறையை அணுகி புகார் அளிப்பது போன்று பள்ளியைக் குறித்து அனைத்து விஷயங்களையும் அறிந்து கொண்டோம். மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பள்ளிக்கு சென்றவுடன் நான் இந்தப் பயிற்சியைக் குறித்து என் நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டேன். இந்த பயிற்சியின் மூலம் பள்ளியில் நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிந்து கொண்டேன்.

# எனது வெற்றிப் பயணம்

எனது பெயர் கன்னியம்மாள். நான் எண்ணூரில் உள்ள அத்திப்பட்டு என்னும் ஊரில் வசித்து வருகின்றேன். நான் பழங்குடியினத்தை சேர்ந்தவள். அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் ஒரு உறுப்பினராக உள்ளேன். எனது ஆசை என்னவென்றால் என் ஊரில் யாரும் பட்டதாரி இல்லை. நான் ஒரு பட்டதாரியாக ஆக வேண்டும் என்பது தான்.

எனது குடும்பத்திலும் எவரும் படித்தவர்கள் இல்லை. எனது பகுதியிலும் யாரும் படிக்கவில்லை. எனது பெற்றோர்களும் நான் படிப்பதை விரும்பவில்லை. எங்கள் குலத்தொழிலான பூச்சி பிடிப்பது, மீன் பிடிப்பது போன்ற தொழிலில் வரும் சொற்ப வருமானத்தை வைத்து நான் எனது இரண்டு தம்பிகள், பெற்றோர்கள் ஒருவேளை சாப்பிடுவதற்கு சரியாக இருக்கும். இதில் படிப்பு தேவையா? என்று என் குடும்பத்தினர் என்னை அடிக்கடி கேட்டனர்.

பிரச்சனைகளை எதிர் கொண்டு நான் 12 ஆம் வகுப்பு வரை படித்தேன். ஆனால் தேர்வில் இரண்டு பாடங்கள் தேர்ச்சி பெற முடியவில்லை. எனது இலக்கு, முயற்சி, கனவுகள் அனைத்தும் வீணாகியது. நான் அதிர்ந்து நின்றேன். என் பெற்றோர்கள் குடும்ப நிலையை காரணம் காட்டி படிப்பை விட்டு திருமணம் செய்து கொள் என்று கூறினார்கள். மீறி கல்வியை தொடர்ந்தால் சான்றிதழ்களை நான் அழித்து விடுவேன். திருமணம் செய்து விடுவேன் என்று குடித்துவிட்டு என்னிடம் சண்டையிடுவார். அதையும் மீறி எனக்கு படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. நான் வீட்டில் இருந்த படியே தோல்வி பெற்ற பாடத்தை படித்தேன்.

அருணோதயா பணியாளர் திருமதி. ஜோதி மேடம் என்னை ஊக்குவித்தார். அருணோதயா மூலம் எனக்கு ஆலோசனையும் கிடைத்தது. 2023,2024, ஆகிய இரண்டு வருடமும் என்னால் தேர்ச்சி அடைய முடியவில்லை. ஆனால் 2025ல் நடைபெற்ற தேர்வில் நான் தேர்ச்சி பெற்றேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நான் இப்போது சர்தியாகராயா கல்லூரியில் பிஎஸ்சி விலங்கியல் பட்டப்படிப்பில் இணைந்து படிக்கிறேன். தந்தையும் மகிழ்ச்சி அடைந்தார். நானும் விரைவில் என் பகுதியிலேயே முதல் பட்டதாரியாக ஆகப் போகின்றேன், என்று நினைக்கும் போது என் கண்கள் தானாக கண்ணீரை வெளியிடுகின்றது. ஊக்க மளித்த அருணோதயா நிறுவனத்திற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இதன் மூலம் நான் சொல்லுவது என்னவென்றால் நமக்கு ஆயிரம் தடங்கல் வரும் அவற்றை கடந்து நம் இலக்கை அடைய வேண்டும். தேர்வில் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும். தோல்வி அடைந்தாலும் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும்.




**R. கன்னியம்மாள்**
12 ஆம் வகுப்பு, எண்ணூர்

## கோடை விடுமுறை கவிதை



கோடை விடுமுறை வருடம் வரும் ஒருமுறை !
ஆனந்தத்திற்கு எல்லை இல்லை விடுமுறை !
சிறியவர்க்கும் பெரியவருக்கும் மகிழ்ச்சி தரும் விடுமுறை
சொந்த ஊருக்கு செல்ல விரும்பும் விடுமுறை !
உறவுகளை சந்திக்க இந்த விடுமுறை !
பேருந்து இரயில் நிரம்பி வழியும் விடுமுறை !
கூட்டத்தைக் கண்டும் அஞ்சாத விடுமுறை !
விற்பனையாளர்களுக்கு பிடித்த விடுமுறை !
வாங்கி சாப்பிடப் பிடிக்கும் இந்த விடுமுறை !
குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த விடுமுறை !
திரும்பத் திரும்ப வரும் இந்த விடுமுறை !
எதிர்பார்த்துக் கொண்டிருப்போம் அடுத்த விடுமுறை !!



**S. கோகுலகிருஷ்ணன்**
9 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# எனது கருத்து

என்னுடைய பெயர் எஸ் தமிழரசி. நான் அருணோதயாவில் கடந்த 5 வருடங்களாக அமைப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன் பத்து வருடமாக பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தேன்.எனக்கு குழந்தைகளோடு வேலை செய்வது மிகவும் விருப்பம். மேலும் சமூக ஆர்வலராக வேலை செய்வதும் எனக்கு மிகவும் பிடிக்கும். என்னுடைய பணியில் எனக்கு மிகவும் பிடித்தது பள்ளியில் இடைவிலகலான குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களை மீண்டும் பள்ளிக்கு அனுப்புவது. அவ்வாறு நான் நிறைய குழந்தைகளை பள்ளியில் சேர்த்து இருக்கிறேன். அதில் எனக்கு மிகவும் பிடித்த மற்றும் நான் முயற்சி செய்து நல்ல ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு குழந்தையை பற்றி பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் பெயர் மதுமிதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) . அவர் அரசு பள்ளியில் படித்து வந்தார். அவர் பண்னிரண்டாம் வகுப்பு படித்து வந்த நிலையில் அவருடைய பாலியல் நடத்தை காரணமாக பள்ளியில் அவரை நிறுத்தி விட்டனர். அதனால் அவர் பள்ளிப் படிப்பை தொடர முடியாமல் இருந்தது. மேலும் அவரை ஒரு குற்றவாளி போல வீட்டிலும் பள்ளியிலும் நடத்தினர்.

அவர் மிகவும் நன்றாக படிக்கக் கூடிய குழந்தை, வளரிளம் பருவ மாற்றங்கள் மற்றும் ஹார்மோன் சுரப்பிகளின் விளைவால் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி புரிந்து கொள்ளாத ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களால் அந்த குழந்தை பள்ளி இடைவிலகல் ஆகும் நிலை ஏற்பட்டது.

இந்த தகவலை நான் தெரிந்த போது அவருடைய முகவரியைப் பற்றி கேட்டதற்கு பள்ளியில் ஆசிரியர்கள் வழங்கவில்லை. நான் வீடு சந்திப்பு செய்யும் பொழுது அந்தக் குழந்தையை கண்டறிந்து அவரிடம் பேசினேன். அப்போது அவர் தனக்கு படிக்க மிகவும் ஆசையாக உள்ளது. நான் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுத வேண்டும் என்று கூறினார். பின் அவருடைய பெற்றோரிடமும் நான் பேசினேன். மீண்டும் அவரை பள்ளியில் சேர்த்து தலைமை ஆசிரியரோடு பேசி அவரை மறுபடியும் பள்ளிக்கு அனுப்பினேன். அவர் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதி 304 மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றார். தற்போது ஆர்கே நகர் கல்லூரியில் B.A தமிழ் பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளார். என்னால் ஒரு குழந்தையுடைய பள்ளி படிப்பு நிறுத்தப்படாமல் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கும், அவர் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் பெற்று கல்லூரியில் பட்டப்படிப்பும் படிக்கின்றார் என்பது மிகவும் சந்தோஷமாக




திருமதி. தமிழரசி
அருணோதயா பணியாளர், திருவொற்றியூர்

# ஆசிரியர் கவிதை

ஆசிரியர் உற்ற குருவாயிருப்பார்!
பெற்றோரின் மறு உருவாய் இருப்பார்!
பல நூல் கற்ற அறிவாய் இருப்பார்!
கற்றுக் கொடுக்கையில் பதிவாய் இருப்பார் !!
தவறு நாம் இழக்கையில் தட்டிகேட்டு திருத்துபவராய் இருந்து!
நம் உணர்வுகள் புரிந்த நட்பாக இருப்பார் !
நல் உறவாக இருப்பார்!
நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாய் இருப்பார்!
நம் வாழ்வின் விடியலாயிருப்பார் !
நம்மை உயர்த்தும் வெற்றிப் படியாய் இருப்பார்!
பள்ளி முதல் கல்லூரி வரை பயிற்றுவித்த அத்தனை
ஆசிரியர்களும் என்றும் நம் நினைவில் நிலையாய் இருப்பார்!





P. தேன்மொழி
10 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை



# கோடை மழை

**அனைவருக்கும் வணக்கம்**

இந்த ஆண்டு மே மாதம் வெயில் எப்படி இருந்தது. வெப்பம் அதிகமாக இருக்கும். மே மாதத்தில் இந்த ஆண்டு குறைவாகவே இருந்தது. ஏன்? எதனால் என்பதை குறித்து நான் படித்தேன். அதை உங்களிடம் பகிர்கின்றேன்.

**வெயில் காலத்தில் மழைக்கான காரணங்கள்:**


**வெப்பச்சலனம்** நிலம் சூரியனால் சூடேற்றப்படும் போது பூமி தன்னைவிட குறைந்த வெப்ப நிலையில் உள்ள காற்றைவிட இலேசான வெப்ப நிலை கொண்டதாக மாறும். இதனால் சூடான காற்று உயரமாக எழும்புகிறது. உயரம் செல்ல செல்ல காற்று குளிர்வதால் நீராவியாக மாறி மேகம் உருவாகி மழை பொழிகிறது.

**மேலடுக்கு சுழற்சி** அதிக வெப்பம் காரணமாக சில சமயங்களில் வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சிகள் உருவாகுகின்றன. இவை மழை மேகங்களை உருவாக்கும். இதன் காரணமாக கோடைமழைப் பொழிய வாய்ப்பு ஏற்படுகிறது.

கோடை காலத்தில் நிலம் அதிக வெப்பமடைவதால் வெப்ப சலன மழை அதிகமாக இருக்கும் இந்த மழை பொதுவாக இடியுடன் கூடிய மழையாக இருக்கும்.

மேலும் கடல் காற்று கடற்கரைப் பகுதியில், பகலில் நிலம் வேகமாக வெப்பமடைகிறது. கடலில் இருந்து நிலத்தை நோக்கி வீசும் காற்று ஈரப்பதத்தை எடுத்துக் கொண்டு மேலே எழும்பும் போது மழை பொழியும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த காரணங்களால் வெயில் காலத்தில் மழை பெய்யும் வாய்ப்புகள் அதிகம் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துக் கொள்கிறது.

ஆனால் இவ்வாறு வெயில் காலத்தில் மழை பொழிவது மழை காலத்தில் வெப்பம் போன்ற நிகழ்வுகள் தொற்று நோயைப் பரப்பும் விதமாகவும் கிருமிகளை உண்டாக்குவதாகவும் உள்ளது. பூமி வெப்பமடைவதை தடுப்பது நமது கடமையாகும்.



**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு, எண்ணூர்

## என்னால் முடியும்

என் பெயர் மனஸ்ரினி. நான் மணிகண்ட முதலி உயர்நிலைப் பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கின்றேன். பள்ளி விடுமுறையில் நான் ஆந்திராவில் உள்ள எனது மாமாவின் வீட்டிற்கு சென்றேன். அங்கு பாட்டி, அத்தை, மாமா, மாமாவின் குழந்தைகள் மற்றும் உறவினர்களுடன் நேரத்தை செலவழித்தேன்.

அங்கு அனைவரும் சேர்ந்து சுற்றுலாவுக்கு சென்றோம். அருகில் உள்ள கோவிலுக்கு சென்று வழிபட்டோம். இது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதாக இருந்தது. மேலும் எங்கள் பாட்டி வீட்டிலேயே நிறைய தின்பண்டங்கள் செய்து கொடுத்தார். அவை மிகவும் சுவையாக இருந்தது. அங்குள்ள குழந்தைகளுடன்நானும் விளையாடி மகிழ்ந்தேன்.

இந்த விடுமுறை புதிய திறன்களை வளர்த்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது. என் பாட்டி எனக்கு கூடை பின்னுதல் கற்றுக் கொடுத்தார். எனக்கு கூடை பின்னுவது கடினமாக இருந்தது. விடாமல் தொடர்ந்து முயற்சி செய்து நானே ஒரு கூடை பின்னினேன். வீட்டில் உள்ள அனைவரும் என்னை பாராட்டினார்கள். எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்த கோடை விடுமுறை நாட்கள் எனக்கு பிடித்ததாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.



**C. மனஸ்ரினி**
7 ஆம் வகுப்பு, இராயபுரம்

# காலம் உயிர் போன்றது

கோடைகால விடுமுறை அப்பாடா!ஒரு மாதம் விடுமுறை விட்டுட்டாங்க ! ஜாலி ஜாலி!!

ஒரு வருஷம் முழுசா பாடங்களைப் படித்து தேர்வு எழுதி பின்பு எப்படா தேர்வு முடியும்? எப்படா விடுமுறை வரும்? காத்திருக்கிறோம். தேர்வு காலங்களில் முதல் ஐந்து தேர்வு முடிந்ததும் ஏதும் தெரியாது!!

ஆனால் அந்த இறுதித் தேர்வை எழுதி விட்டு வெளியே வரும்போது ஒரு உணர்வு வரும் பாருங்க! பெரிய போர் முடிந்து வந்த மாதிரி தோன்றும்.

இது எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் என்று நினைக்கிறேன். விடுமுறை விட்டாச்சு இப்ப என்ன சுற்றுலா தான். ஆனா இந்த பத்தாம், பதினொன்றாம், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் நினைச்சு படபடன்னு அடிச்சுக்கும். நான் 1 2 ஆம் வகுப்பு முடித்து கல்லூரியிலும் சேர்ந்து விட்டேன். எப்போ கல்லுரி திறப்பாங்க புதிய நண்பர்களை எப்போது பார்க்கலாம் என்று காத்திருக்கிறேன்.

கோடைக்கால விடுமுறையில் நிறைய கற்றுக் கொண்டேன். இளம் வழி நடத்துனர் பயிற்சியில் பள்ளியில் குழந்தைகளின் பாதுகாப்பு என்ற தலைப்பில் நிறைய கற்றுக் கொண்டேன். எஸ்.டி.சி எனும் கம்ப்யூட்டர் கிளாஸ் கோர்ஸ் முடிக்க போகிறேன். நண்பர்களே!! ஒன்று மட்டும் புரிஞ்சுக்கோங்க. கோடை விடுமுறை என்பது, ஜாலியாக இருப்பது எல்லாமே சரிதான் !! அது தப்பே இல்ல ஆனால் கொஞ்சம் சிந்தித்து திட்டமிட்டு கோடை விடுமுறையை நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

படிப்பு என்பது முக்கியம். ஆனாலும் வாழ்க்கை கல்வி என்பது அதைவிட முக்கியம் உன் திறன்கள் என்பது உன் வாழ்வை உயர்த்துவது மட்டும் அல்லாமல் எந்த பிரச்சினையும் எவ்வாறு எதிர் கொள்ளலாம் என்பதை கற்றுக் கொடுக்கும். எனவே "**காலம் பொன் போன்றது**" என்று சொல்வார்கள் ஆனால் நான் சொல்வது "**காலம் உயிர் போன்றது**" தங்கத்தை கூட பணம் இருந்தால் மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். உயிர் பெற்றுக் கொள்ள இயலாது. எனவே உங்கள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள் விடுமுறை நாட்களை திட்டமிட்டு பயனடையுங்கள்.



**S.** விஷால்
கல்லூரி முதலாம் ஆண்டு, எண்ணூர்

## புத்தகத்திற்கு விடுமுறை

கண் விழித்து படித்த புத்தகம்
களைப்பாற ஓரம் உறங்கும்!!

வீட்டில் உள்ள அறைகள்
விளையாட்டுப் பொருளின் அரங்கம்!!

இரவு தாண்டிய ஆட்டம்
நீச்சல் குளங்களில் கூட்டம்
கடற்கரையில் கொண்டாட்டம்!!

பல்லாங்குழி, தாயம், கேரம்
கில்லி,கோலி,,,பம்பரம்-பழங்கால
விளையாட்டுக் கொண்டாட்டம்!!

கல்விச் சார்ந்த சிறப்பு வகுப்புக்கள்
வலைதளங்களில் தீராவிளையாட்டுகள்
நேரம் இல்லா தூக்கம்!!

கோடை விடுமுறை!! குழந்தை மனதில் மலர்ச்சி!!





**R.** தன்மயா
8 ஆம் வகுப்பு, இராயபுரம்

# கோடை விடுமுறையை பயனுள்ளதாக கழிப்பது எப்படி

கோடை விடுமுறை என்பது பள்ளி மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் காலமாகும். அது வழக்கமான பள்ளிப் பாடங்களில் இருந்து இடைவெளி மற்றும் மன அழுத்தம் இல்லாத பொழுது போக்குவதற்க்கான அரிய வாய்ப்பு ஆகும். மாணவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடவும், பயணங்கள் செல்லவும், புதிய விஷயங்களை கற்றுக் கொள்வும் சிறந்த நேரம்.



கோடை விடுமுறையின் நன்மைகள் மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல், பள்ளிப் பாடங்கள் மற்றும் தேர்வு சுமையிலிருந்து விடுபட்டு மாணவர்கள் ஓய்வெடுக்கவும், பள்ளி மற்றும் வேலை காரணமாக குடும்பத்தினருடன் போதிய நேரம் செலவிட முடியாமல் இருப்போம் .கோடை விடுமுறையில் குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிடலாம்.

**பயணங்கள்**


கோடை விடுமுறையில் மாணவர்கள் தங்கள் குடும்பத்துடன் சேர்ந்து புதிய இடங்களுக்கு சென்று புதிய அனுபவங்களைப் பெறலாம், புதிய திறன்களையும் கற்றுக் கொள்ளலாம். மாணவர்கள் தங்களுக்கு பிடித்தமான விஷயங்களைக் கற்றுக் கொள்ளவும் புதிய திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் இந்த விடுமுறை ஒரு வாய்ப்பாக அமைகிறது. உதாரணத்திற்கு ஓவியம், இசை, நடனம், விளையாட்டு போன்றவற்றை கற்றுக் கொள்ளலாம்.

கோடை விடுமுறையில் மாணவர்கள் தங்கள் பலவீனங்களை அடையாளம் கண்டு அவற்றை பலப்படுத்திக் கொள்ளவும், சுய முன்னேற்றத்திற்கான வழிகளை கண்டறியும் முடியும். மாணவர்கள் தங்கள் விடுமுறை நாட்களை பயனுள்ளதாக மகிழ்ச்சியாகக் கழித்த திட்டமிடல் செய்ய வேண்டும்.

**வாசிப்பு**

புதிய புத்தகங்களை படிப்பதன் மூலம் அறிவினை பெருக்கிக் கொள்ள முடியும். தன்னார்வ தொண்டு செய்வது மூலம் சமூகத்திற்கு உதவுவதோடு நல்ல அனுபவங்கள் பெறலாம். கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். இடையே கோடை விடுமுறையில் நாம் உடலை ஆரோக்கியமாக வைக்கவும் உடற்பயிற்சியிலும் ஈடுபடலாம்.

நன்றி



**M.** வைஷாலி
10 ஆம் வகுப்பு, எண்ணூர்



# எனது பயணம்

எனது பெயர் எம். மகாலட்சுமி. என்னுடைய அப்பாவின் பெயர் எஸ். முரளி. அம்மாவின் பெயர் எம். கோவிந்தம்மாள். அப்பா அவர்கள் கட்டிட வேலையில் உதவியாளராக உள்ளார். நான் ஆற்காட்டில் உள்ள அனர்த்தங்கள் என்னும் கிராமத்தில் பிறந்தேன். எங்கள் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு முடித்தேன். ஒரு சில காரணங்களால் அந்த ஊரை விட்டு சென்னைக்குக் குடி பெயர்ந்தோம். என் உடன் பிறந்தவர்கள் இரண்டு பேர் அக்கா மற்றும் தம்பி. அக்கா பிஎஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து வருகின்றார்கள், என் தம்பி 11ஆம் வகுப்பு படிக்கிறான். நான் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்வாக வேண்டும் என்று கடுமையாக படித்தேன்.

இரவு பகல் பாராமல் நன்றாக படித்தேன். பொதுத் தேர்வில் **580** மதிப்பெண் பெற்றேன். என்னுடைய கனவு சிஏ படிப்பது தான். ஆனால் இப்பொழுது பி.காம் ஜெனரல் கோர்ஸ் கிடைத்து உள்ளது. எம்ஜிஆர் ஜானகி காலேஜில் படிக்க வேண்டும் என்பது எனது ஆசை. அதன்படி என்னுடைய பெற்றோர்கள் என்னை அந்த கல்லூரியில் சேர்த்துள்ளார்கள். மிகவும் சிரமப்பட்டு என்னை படிக்க வைக்கும் என் பெற்றோருக்கு நான் நன்றிக் கடனாக நான் நன்றாக படித்து எதிர்காலத்தில் என் பெற்றோரை நல்ல முறையில் பார்த்துக் கொள்வேன்

**M. மகாலட்சுமி**
பி.காம் ஜெனரல், கொருக்குப்பேட்டை



## வழிகாட்டுதல் மற்றும் தொடர் கண்காணிப்பு

1 0 ஆம் வகுப்பு மற்றும் 1 2 ஆம் வகுப்பு பொதுதேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்கு அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் மூலம் கல்வி ஊக்குவிப்பு முகாம் நடத்தியதுடன் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டதன் விளைவாக குழந்தைகள் அனைவரும் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர்.

### பகிர்வு

என் பெயர் S . வர்ஷா நான் கோமாதா நகரில் வசித்து வருகின்றேன். அப்பா பிளம்மர் வேலை செய்கின்றார். அம்மா வீட்டை கவனித்து கொள்கின்றார். எனக்கு அக்கா இருகின்றாள். நங்கள் மகிழ்ச்சியாக தான் வாழ்ந்து வந்தோம். நான் 10 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளியில் படித்து வந்தேன். நான் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 410மதிப்பெண் எடுத்தேன். அதன் பிறகு திடிரென அப்பா உடல்நிலை சரியில்லாமல் போனது. அவரால் வேலைக்கு செல்ல முடியவில்லை. வீட்டில் வறுமை காரணமாக மிகவும் கஷ்டப்பட்டோம். நானும் வேலைக்கு செல்ல வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

ஆனால் அருணோதயா வளரிளம் பருவ கூட்டங்களில் கலந்து கொண்டு வாழ்க்கை திறன்கல்வி, கல்வி வழிகாட்டுதல் பயிற்சி போன்றவற்றில் கலந்து கொண்டதன் விளைவாக கல்வி முக்கியம் என்பதை அறிந்து கொண்டேன். என் அம்மா வேலைக்கு சென்றார்கள். நான் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு காமர்ஸ் பாடத்திட்டத்தில் சேர்ந்தேன். தேர்வில் 510 மதிப்பெண் எடுத்து இருந்தேன். 12ஆம் வகுப்பிலும் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டுமென திட்டமிட்டு படித்தேன். எங்கள் பாலாஜி அண்ணா எனக்கு கணக்கு பாடம் சொல்லி கொடுத்தார்.

நான் நன்றாக படித்ததன் விளைவாக 12 ஆம் வகுப்பு தேர்வில் 523 மதிப்பெண் எடுத்தேன். இப்பொழுது நான் டிஜி வைஷ்ணவா கல்லூரியில் பிகாம் ஜெனரல் பாடப்பிரிவில் சேர்ந்து படிக்கின்றேன். கண்டிப்பாக நான் கல்லூரியில் நன்றாக படிப்பேன். நான் C A படிக்க வேண்டுமென்பது என் இலட்சியம். கண்டிப்பாக என் இலட்சியத்தை அடைவேன். அம்மா, அப்பாவை மகிழ்ச்சியாக பார்த்துக் கொள்வேன்.

# வாழ்த்துக்கள்

## 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்

| வ.எண் | பகுதி | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | | |
|---|---|---|---|---|---|
| | | | 400 க்குமேல் | 300 க்குமேல் | 200 க்குமேல் |
| 1 | கொருக்குப்பேட்டை | 54 | 09 | 21 | 20 |
| 2 | திருவொற்றியூர் | 20 | - | 06 | 06 |
| 3 | எண்ணூர் | 49 | 04 | 12 | 18 |
| 4 | இராயபுரம் | 09 | 01 | 05 | 03 |
| | **மொத்தம்** | **132** | **14** | **44** | **47** |

## 11 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்

| வ.எண் | பகுதி | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 500 க்கு மேல் | 400 க்கு மேல் | 300 க்கு மேல் | 200 க்கு மேல் |
| 1 | கொருக்குப்பேட்டை | 61 | 4 | 15 | 29 | 10 |
| 2 | திருவொற்றியூர் | 21 | - | 06 | 13 | 02 |
| 3 | எண்ணூர் | 28 | - | 05 | 11 | 08 |
| 4 | இராயபுரம் | 02 | - | - | 1 | 01 |
| | **மொத்தம்** | **112** | **4** | **26** | **54** | **21** |

## 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்

| வ.எண் | பகுதி | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 500 க்கு மேல் | 400 க்கு மேல் | 300 க்கு மேல் | 200 க்கு மேல் |
| 1 | கொருக்குப்பேட்டை | 40 | 05 | 16 | 11 | 04 |
| 2 | திருவொற்றியூர் | 18 | 02 | 01 | 10 | 03 |
| 3 | எண்ணூர் | 18 | - | 07 | 06 | 03 |
| 4 | இராயபுரம் | 04 | - | 01 | 03 | - |
| | **மொத்தம்** | **80** | **07** | **25** | **30** | **10** |

**தேர்வு அடையாத குழந்தைகள் மறுதேர்வு எழுதுவதற்கு அருணோதயா ஊக்கம் அளித்து வருகின்றது. அனைத்து குழந்தைகளும் கல்வியை தொடர முயற்சி எடுக்கப்படுகின்றது.**




உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும்
வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்